# கலித்தொகை கூறும் அறச்சிந்தனை, கற்பனை, உவமை - ஒரு பார்வை கலித்தொகை ஒரு வாழ்வியல் காவியம்

**ஆய்வாளர். கி. வீரராகவன் & ஆய்வு நெறியாளர் பா. பிரியா**
*மேற்பார்வையாளர் & தமிழ் விரிவுரையாளர்*
*பொன்னையாராமஜெயம் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப பட்ட மேற்படிப்பு மையம், புதுச்சேரி*

**முன்னுரை**

மக்களின் வாழ்வியலை இலங்கச் செய்வனவே இக்கலியிலுள்ள செய்யுள்கள். அக்காலத்து ஐவேறு நிலத்தவர்களின் பல்வேறு வாழ்க்கை நிலைமைகளையும் சுவை குன்றாமல் அழகோடும் நயமாகவும் விளக்குகின்றன.

அன்பையும், ஆண்மையையும், பண்பையும் அடிப்படையாகக் கொண்டு வாழ்ந்த பழந்தமிழரின் நல்லற வாழ்க்கையையே எம்மருங்கும் கலியில் கவினுறக் காணலாம். இந்நூலின் பாடல்கள் இசையோடு பாடும் இசைப்பாட்டே. இதனை 'கலி' எனவும் 'கலிப்பாட்டு' எனவும் 'நூற்றைம்பது கலி' எனவும் 'இசைப்பாட்டு' எனவும் 'வெண்பா நடைத்து' எனவும் உரையாசிரியர்கள் கூறினர்.

கலியோசை பெற்று அமைந்த நூற்றைம்பது பாடல்கள் கொண்ட இக்கலித்தொகை துள்ளல் ஓசையால் ஆனது. இதனை சான்றோர் 'கற்றிந்தோர் ஏத்தும் கலி', 'கல்விவலார் கண்டகலி', 'ஓரங்க நாடக அமைப்பு' எனப் புகழ்வர்.

கலிப்பா வகையால் இயற்றப்பட்ட ஒரே எட்டுத்தொகை இலக்கியம் கலித்தொகையே. இந்நூலில் ஐந்து திணைகளின் மக்கள் வாழ்ந்த வாழ்வியலை படம்பிடித்துக் காட்டுகின்றன.

**ஐந்து திணைகள்**

1. பாலைக்கலி
2. குறிஞ்சிக் கலி
3. முல்லைக்கலி
4. மருதக்கலி
5. நெய்தற்கலி

**கலித்தொகை கூறும் அறச்சிந்தனை கொடைத்தன்மை**

பொருள் தேடும் நினைவால் தன் மனைவியைப் பிரிந்து செல்ல நினைத்தான் ஒருவன். அவன் மனைவியின் தோழி அதனை அறிந்தாள். 'அவன் செல்வதால் விளையும் பயனிலும் செல்லாதிருப்பதே சிறப்பானது' என்று தெளிவுப்படுத்தினாள். அதற்குத் தலைவன் கூறியது.

ஈ என இரத்தல் இழிவு. அதன் எதிர் ஈயேன் என்றல் அதனினும் இழிவு, என்னும் புறநானூறு இதனை அறிந்தவன் போலும் பாலைக்கலித்தலைவன் தொலைவாகி இரந்தோர்க்கு ஒன்று ஈயாமை இழிவு

பா.க.-1-10

'இல்' என இரந்தார்க்கு ஒன்று ஈயாமை இழிவு

பா.க.-1-15

இடன் இன்றி இரந்தோர்க்கு ஒன்று ஈயாமை இழிவு

பா.க.-1-19

தம்பொருளைப் பிறர்க்கு வழங்கித் தொலைத்துவிட்டு அவர் நம்மிடம் வந்து இரந்து நின்றால் அவர்க்கு ஈயாதது இழிவு.

எம்மிடம் ஒருபொருளும் இல்லை என்று இரந்தவர்க்கு ஈயாதது இழிவு.

வேறு போக்கிடம் இல்லை என்று வந்தவர்க்கு ஈயாதது இழிவு என்று கருதி பொருள் ஈட்டச் செல்கின்றான் தலைவன்.

வாழ்வில் ஒவ்வொரு மனிதனும் பொருளீட்டி தாமே நுகராமல், இல்லை என்று நம்மிடம் வந்து இரந்தோர்க்கு கொடுத்து வாழ்விக்க வேண்டும் என்ற நெறிமுறையை கூறுகிறது.

**பொருட்செல்வம்**

பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை
என்பது வள்ளுவம்.
பொருள் அல்லால் பொருளும் உண்டோ?

- பா.க.-13-10

பொருளைத் தவிர வேறு சிறந்த பொருளும் உலக வாழ்க்கைக்கு உண்டோ?

பொருள் உலக வாழ்க்கைக்கு இன்றியமையாதது என்பதால் நடுவுநிலைமை நீங்கி பொருள் ஈட்டினால் அப்பொருள் இம்மைக்கும் மறுமைக்கும் பகையாகும் என்று எச்சரிக்கிறது பாலைக்கலி.

செம்மையின் இகந்து ஒரீஇப் பொரள்
செய்வார்க்கு அப்பொருள்
இம்மையும் மறுமையும் பகையாவது

- பா.க.-13-14,15

அறவழியில் பொருள் ஈட்டினால்தான் அப்பொருள் நிலையானதாக அமைந்து எப்பிறவியிலும் நம்மை வாழ்விக்கும், புகழ்தேடிதரும் என்ற நெறிமுறையை கூறுகிறது.

**வளமை**

நாள்தோறும் நம் நற்செயலால் வளமையை உண்டாக்க முடியும்.

வளமையோ வைகலும் செயலாகும்

பா.க. 14-24

நாம் நற்சிந்தனையோடு நற்செயல்களை நம்கடமையாகக் கொண்டு செய்தால் நாம் வளமோடு வாழலாம்.

**இளமை நிலையற்றது**

வரம்புக் கட்டிக்கூற இயலாத நிலையாமையை உடையது. காற்று அதைப்போன்றுதான் வாழ்க்கையும்.

ஆற்றில் வெள்ளம் வருவதும் தெரியாது. வடிவதும் தெரியாது. அதுபோன்றுதான் இளமையும்.

வளியினும் வரைநில்லா வாழும்நாள்
யாறுநீர் கழிந்தன்ன இளமை

- பா.க.-19-13

வாழ்க்கை நிலையற்றது. இளமை ஒரு குறுகிய காலம் மட்டுமே பிறகு மறையும் என்பதை வலியுறுத்துகிறது.

**செல்வம் நிலையற்றது**

செல்வம் என்னும் பெயர்ச்சொல் செல் + வ் + அம் = செல்வம். செல்வோம் என்னும் பொருள்பட வினைச்சொல்லாகவும் பெறும். ஓரிடத்தில் நில்லாமல் சென்றுகொண்டே இருக்கும். முன்வினையின் அளவுக்கு பெயர்ந்து பெயர்ந்து செல்லும்.

கிழவர் இன்னோர் என்னாது பொருள்தான்
பழவினை மருங்கின் பெயர்பு பெயர்பு உறையும்

பா.க.2 -10,11

ஒருவரிடம் செல்வம் நிலையாக இருக்காது. அது அவருடைய முன்வினையைப் பொறுத்து அவரை விட்டு செல்லும்.

**பிறந்த வீடா? புகுந்த வீடா?**

பிறந்த இடத்தைவிட புகுந்த இடத்திற்கே பயன்படுவன சந்தனமும், முத்து மாலையும், யாழிசையும், பயன்படுவர் பெண்டிர்.

பல நறுமணப் பொருளும் கூடிய மணம் உள்ள சந்தனம் மலையில் தோன்றினாலும் பூசுபவர்க்குத்தான் அதுதன் மணத்தைத் தரும்.

கடலிலே முத்து தோன்றினாலும் அதை மாலையாகக் கோத்து அணிபவர்க்கே அது பயன்படும்.

யாழில் இசை தோன்றினாலும் கேட்பவருக்குத் தான் அவ்விசை இன்பம் தரும்.

பிறந்த வீட்டைவிட புகுந்தவீட்டிற்கே பெண்டிர் பயன்படுவர்.

பலவுறு நறுஞ்சாந்தம் படுப்பவர்க்கு அல்லதை
மலையுளே பிறப்பினும் மலைக்கு அவைதாம் என்செயும்?
சீர்கெழு வெண்முத்தம் அணிபவர்க்கு அல்லதை
நீருளே பிறப்பினும் நீருக்க அவைதாம் என்செயும்?
ஏழ்புணர் இன்னிசை முரல்பவர்க்கு அல்லதை
யாழ்உளே பிறப்பினும் யாழ்க்கு அவைதாம் என்செயும்?
சூழுங்கால் நும்மகள் நுமக்கு ஆங்கு ஆனையளே.

- பா.க.-3, 11,20

பெண்கள் பிறந்து வளர்ந்த வீட்டைவிட, வாழப்போகும் வீட்டிற்கே தன்னை தியாகம் செய்வாள்.

**ஒன்பது பண்புகள்**

கலித்தொகை நூலுக்கே முடிமணியாகத் திகழ்வது 9 பண்புகளுக்கு கச்சிதமான இலக்கணம் கூறும் நெய்தல் கலியின் 16 ஆம் பாடல். நல்லந்துவனார் ஆசிரியர் ஆனதால் அவர் அழகாக இலக்கணம் வகுக்கிறார்?

**ஆற்றுதல்**: செய்தல் - ஈதல் - என்பது வறியவர்க்கு ஒரு பொருள் கொடுத்து உதவுதல் ஆகும்.

“வறியவர்க்கு ஒரு பொருள் கொடுத்து உதவுதல் ஆகும். வறியவருக்கு ஒன்று ஈவதேஈகை” என்னும் திருக்குறள்.

**போற்றுதல்**: பாராட்டுதல் - என்பது கூடியவரை – சேர்ந்தவரைப் பிரியாதிருத்தல் ஆகும். “ஒருவர் பொறை இருவர் நட்பு” என்பது பழமொழி.

**பண்பு**: எனப்படுவது உலகியல் அறிந்து நடத்தல் படைத்துள்ளார் திருவள்ளுவர். புலவர் வாயில் அடிபடும் தொடர் இது.

**அன்பு**: எனப்படுவது தன் உறவு,சுற்றம் ஆகியவர்மேல் சினம் கொள்ளாது இருத்தலாகும். குறளின் பத்து உடைமைகளில் அன்புடைமை தலையாயது. தொடர்பு உடையார் இடத்துச் செலுத்துவது அன்பு என்பர்.

**அறிவு**: எனப்படுவது அறிவிலிகள் கூறும் பழிச்சொற்களைப் பொறுத்துக்கொள்ளுதல் ஆகும். திருவள்ளுவர் கூறும் பத்து உடைமைகளில் இதுவும் ஒன்று.

**செறிவு**: நிறைவு – என்று கூறப்படுவது தான் கூறியதை மறுக்காதிருத்தல் ஆகும். நிலம் பெயரினும் சொல் பெயரார் என்பர்.

**நிறைவு**: அடக்கம் - என்று கூறப்படுவது இரகசியத்தைப் பிறர் அறியாமல் ஓட்டை வாயராக இருக்கக்கூடாது.

**முறை**: செங்கோன்மை – நீதி எனப்படுவது இரக்கம் இன்றியே உயிரைக் கொல்லல் ஆகும்.

“கொலையில் கொடியாரை வேந்து ஒறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனொடு நேர்”

என்னும் திருக்குறள்.

**பொறை**: பொறுமை – என்பது கூறப்படுவது ஒரு பொருளாக மதிக்கத்தகாதவர் - அற்பர் - பகைவர் - தீங்கு செய்தால் பொறுத்துக் கொள்ளுதல் ஆகும். பொறை உடைமை என்று பத்து உடைமைகளில் ஒன்றாக இத கருதத்தக்கது.

“ஆற்றுதல்” என்பது ஒன்று அலந்தவர்க்கு உதவுதல்

“போற்றுதல்” என்பது புணர்ந்தாரைப் பிரியாமை

“பண்பு” எனப்படுவது பாடு அறிந்து ஒழுகுதல்

“அன்பு” எனப்படுவது தன்கிளை செறா அமை

“அறிவு” எனப்படுவது பேதையார் சொல் நோன்றல்

“செறிவு” எனப்படுவது கூறியது மறா அமை

“நிறைவு” எனப்படுவது மறை பிறர் அறியாமை

“முறை” எனப்படுவத கண்ணோடாது உயிர் வெளவல்

“பொறை” எனப்படுவது போற்றாரைப் பொறுத்தல்

**கற்பனை**

குளிர்ந்த மணம் உள்ள சோங்க மரங்கள் அலர்ந்த மலைகளெல்லாம் பொன்னாலான முகபடாம் அணிந்த யானைகள்போல் தோன்றும்.

கபிலரின் கற்பனை வியக்கவைக்கிறது. அழகும் இனிமையும் கொண்ட மார்பை உடைய தலைவன், தலைவியின் சிறு முதுகு பக்கம் வர, தலைவியின் மேனிமேல் இருந்த பசலை நிறம் ஞாயிற்றுக்கு முன்னாலிருக்கும் இருள்போல் மறைந்தது.

தண் நறுங்கோங்கும் மலர்ந்த வரையெல்லாம்
பொன் அணி யானை போல் தோன்றும்

கு.க.-6-16-17

சாயல்இன் மார்பன் சிறுபுறம் சார்தர
ஞாயிற்று முன்னர் இருள்போல மாய்ந்தது என்
ஆயிழை மேனிப் பசப்பு

கு.க.6-30-32

நல்ல நாட்டிற்குரிய தலைவன் கூறிய உண்மையில் பொய் தோன்றினால் அது தண்ணிய நிலவில் தீ தோன்றியதாகும்.

அவனுடைய அன்பில் வருந்துகின்ற செயல்கள் தோன்றுமானால் நிழல் கவிந்த குளத்து நீரில் உள்ள குவளை வெந்தாற் போன்றதாகும்.

அவன் நட்புக் கொண்டாரிடம் நெருங்கமாட்டான் துன்புறுத்துவான் என்றால், விண்ணிலுள்ள ஞாயிறு திங்களில் இருள் தோன்றியதற்கு ஒப்பாகும்.

தலைவன் நிலைமாறான் என்பதை குறிஞ்சிகலி பாடிய கபிலர் கூறுகிறார்.

நல்நாடன் வாய்மையில் பொய்தோன்றின்
திங்களுள் தீத்தோன்றி அற்று.

கு.க.-5-23,24

**மலைநாடன்**

ஈரத்துள் இன்னவை தோன்றின் நிழல் கயத்துள்
நீருள் குவளை வெந்தற்று

கு.க.-5-29-37

தொடர்புள் இணையவை தோன்றின் விசும்பின்
சுடருள் இருள்தோன்றியற்று.

கு.க.-5-37-38

**விடுகதை போடுகிறார் கபிலர்**

மிகவும் தேய்ந்துபோனது பிறைநிலவு அன்று – தலைவியின் நெற்றி
களங்கம் அற்றது திங்களும் அன்று – தலைவியின் முகம்
மூங்கில் அமைந்தது மலையும் அன்று – தலைவியின் தோள்
பூ பொருந்தியது சுனையும் அன்று - தலைவியின் கண்
மெல்ல நடக்கும் மயிலும் அன்று – தலைவியின் இயக்கம்
திக்கித் திக்கிப் பேசும் கிளியும் அன்று – தலைவியின் சொல்

தலைவி பிறைபோன்ற நெற்றியும், திங்கள் போன்ற முகமும், மூங்கில் போன்ற தோளும், பூப்போன்ற கண்ணும், மென்மையான நடையும், மழலைபோன்று இன்பம் பயக்கும் சொல்லும் உடையவர் என்பதை மிக அழகாகக் கூறியுள்ளார் கபிலர்.

நுதலும்,முகனும்,தோளும், கண்ணும்
இயலும் சொல்லும்…..
ஐ தேய்ந்தன்று பிறையும் அன்று
மை தீர்ந்தன்று மதியும் அன்று
வேய் அமன்றன்று மயலயம் அன்று
பூ அமன்றன்று சுனையும் அன்று
மெல்ல இயலும் மயிலும் அன்று
சொல்லத் தளரும் கிளியும் அன்று

- கு.கு.-19-7-14

**உவமை**

கல்வி, கேள்வி, ஒழுக்கங்களால் நிறைந்தவர்கள்அடங்கி இருப்பர், அதுபோல கிளைகளில்உள்ள அரும்புகள் மலரும் பருவம் வரும் வரைஅடக்கமாக இருந்தவனாம்.

புதர்களால் உள்ள வண்டுகள் யாழிசைப்பதில்வல்லவர்கள்போல் ஆரவாரித்தனவாம்.

நடனப்பெண்டிர் அசைநதாடுவதுபோல அழகான பூம்கொம்புகள் அசைந்து ஆடினவாம்.

பொருளின் தன்மையை உணர்ந்தவர்கள் வறியார்க்கு ஈவதைப் போல மரங்கள் பூங்கொத்துகளிலிருந்து பூந்துகளைச் சொரிந்தனவாம்.

இளவேனில் சாட்சி இது.

ஆன்றவர் அடக்கம் போல் அலர் செல்லாச்
சினைமொடும்
வல்லவர் யாழ்போல் வண்டார்க்கும் புதலொடும்
நல்லவர் நுடக்கம்போல் நயம் வந்த
கொம்பொடும்
உணர்ந்தவர் ஈகைபோல் இணர்ஊழ்த்த
மரந்தொடும்

- பா.க.-31-8-11.

**உவமை**

விழிப்புணர்வு இல்லாது – அறிவு இல்லாது. உணர்வுவயப்பட்ட பெண்டிருக்கு மூன்று உவமைகளைப் பெருங்கடுங்கோ குறிக்கிறார்.

அக்காலத்தில் பனை ஓலையால் குடைவாகக்கட்டி நீர் வாங்கி உண்பர் உண்டவுடன் அக்குடை ஔவையார் தூக்கி எறிவர். ஒரு பெண்ணின் அழகிய தோளைத் தழுவி ஆசை தீர்ந்தவுடன் அவன் புறக்கணிக்கப்படுவாள்.

ஒரு பெண்ணின் அழகை நுகர்ந்து ஆசைதீர்ந்தவுடன் அவள் புறக்கணிக்கப்படுவாள்.

ஒரு பெண்ணின் அழகை நுகர்ந்து ஆசை தீர்ந்தவுடன் அவளைப் புறக்கணிப்பர். அவள் பாழடைந்த ஊர்போன்று இருப்பாள். ஒரு பெண்ணின் குணத்தை புகழ்ந்து கூடிப் பிரிந்த பின்னர் சூடிப்போட்ட பூவைப் போல அவள் கேட்பாரின்றிக் கிடப்பாள்.

தோள்நலம் உண்டு துறக்கப்பட்டோர்
வேள்நீர் உண்ட குடைஓர் அன்னர்
நல்குநர் புரிந்து நலன் உணப்பட்டோர்
அல்குநர் போகிய ஊர்ஓர் அன்னர்
கூடினர் புரிந்து குணன் உணப்பட்டோர்
சூடினர் இட்ட பூவூர் அன்னர்

**உவமை**

ஓர் அழகிய ஒரு தலைவன் வருணிப்பதாகக் கபிலர் கூறும் திறம் அழகு வாய்ந்தது.

ஒரு சிற்ப நூல் வல்லான் செய்த பாவையோ? அழகிய பெண்களின் உறுப்புகளையெல்லாம் கொண்டு இவளைப் பிரம்மன் படைத்தானோ? (அழகிய பெண்களின் அழகிலிருந்து எள்அளவு எடுத்து, எடுத்து திலோத்தமையைப் படைத்ததாகப் பௌராணிகர் கூறுவர் - திலர்-எள்) உலகினர் மேல்கொண்ட வெறுப்பினால் எமனே, அழகிய பொன்வடிவம் கொண்டானோ? என்றவன், அவ்வழகியைப் பார்த்து,"அழகியே! நீயும் தவறு செய்யவில்லை உன்னைத் தருவிலே நடமாடவிட்ட உம்மவரும் தவறு செய்யவில்லை. தன் அடக்கம் அழிந்த மர்யானையை நீர்நிலைக்குக் கொண்டு செல்லும்போது, மர்யானை வருகிறது. விலகிச் செல்லுங்கள் என்று பறை அறைந்து அறிவிப்பதுபோல, அழகி வருகிறாள். கண்ணை மூடிக்கொள்ளுங்கள் என்று கூறி பறை அறைந்து அறிவிக்காத மன்னனே தவறு உடையவன்" என்கிறான்.

வல்லவன் தைஇய பாவை கொல்? நல்லார்
உறுப்புஎலாம் கொண்டு இயற்றியான் கொல்?
வெறுப்பினால்
வேண்டுஉருவம் கொண்ட ஓர் கூற்றம் கொல்?

- கு.க.20-7-9

**உவமை**

மேருமலையை வில்லாக வளைத்தவன் சிவன், கங்கையின் ஈரம் பொருந்திய சடையினன் வேதம் ஓதிய அந்தனன் : உமையோடு விரும்பிட அம்மலைமேல் இருந்தான். புத்துத் தலைகளைக் கொண்ட அரக்கர் தலைவர் இராவணன். அவன் தன் வீரவளையம் அணிந்த பருத்த கையை உடையவன். ஆக்கையை அம்மலையில் கீழ் புகுத்தி அம்மலையை எடுக்க முடியாமல் வருந்தினான். அது போல

பூத்த வேங்கை மரம் மிக்க வலிமை கொண்ட புலியின் வடிவத்தை ஒத்திருந்தால், வஞ்சம் கொண்டு அதன் அடிமரத்தில் தன் தந்தத்தால் குதிய மதயானை மிகப்பெரிய மலைப்பிளவு எதிரொளிக்கப் பிளிறி தன் தந்தத்தை இழுக்க முடியாது வருந்தியது.

என்ன அழகான உவமை
இமைய வில் வாங்கிய ஈரஞ்சடை அந்தணன்
உமை அமர்ந்து உயர்மலை இருந்தனன் ஆக,
ஐயிரு தலையின் அரக்கர் கோமான்
தொடிப்பொலி தடக்கையின் கீழ்புகுத்து அம்மலை
எடுக்கல் செல்லாது உழப்பவன் போல
உறு புலி உருஏய்ப்ப பூத்த வேங்கையை
காவு அதன் முதல் குத்திய மதயானை
நீடு இரு விடரகம் சிலம்பக் கூய்த் தன்
கொடு புய்க்கல்லாது உழக்கும்

கு.க. 2-1-9.

உயர்ந்த மலை, விண்ணில் செல்லும் திங்கள் நிலவு – மலைக்கு அருகே தெரிந்தது – அது.

அம்மலைமேல் கட்டப்பட்ட தேன் அடைபோன்று தோன்றியது. ஆகவே தேனடையை அடையும் ஏணியைச் சார்த்தினராம். இதுவும் உவமை.

வான்ஊர் மதியம் வரைசேரின் அவ்வரைத்
தேனின் இறால் என ஏணி இழைத்திருக்கும்.

- கு.க. 3.8.9.

நிலவில் உள்ள கலங்கத்தை தேனிக்களின்
மொய்ப்பு என எண்ணினர் போலும்.

**முடிவுரை**

சங்ககாலத்தில் தமிழர்கள் நிலங்களை ஐவகையாக பிரித்து வாழ்ந்திருக்கிறார்கள். நிலத்தின் தன்மையும், அந்நிலத்தில் வாழக்கூடிய தலைவன் தலைவியின் இல்லற வாழ்க்கையும், அந்நிலத்தை ஆளக்கூடிய மன்னனது செங்கோல் ஆட்சியும் இந்நிலத்திலே காணக்கூடிய மலைகளும், மரங்களும், மலர்களும், அருவிகளும்,சுனைகளும், நதிகளும், சோலைகளும் பற்றி புலவர்கள் படம்பிடித்துக் காட்டியதுபோல அழகாக கூறியிருக்கிறார்கள்.

அக்கால மக்கள் அறச்சிந்தனையோடு "அறம் செய்ய விரும்பு" என்ற ஔவை வாக்கினை வாழ்வின் தாரகமந்திரமாகக் கொண்டு தர்மம் மீறாது வாழ்ந்து பெருமை சேர்த்தவர்கள் பலர். தர்மத்தை மீறியவர்கள சிலர். இல்லறவாழ்வு நடத்தும் தலைவனே அற்ப ஆசையின் காரணமாகவும், பசலை நோயின் காரணமாகவும் இல்லற தர்மத்தை மீறி பரத்தையரிடம் சென்று அவன் வாழ்ந்த போது அவனது செல்வ வளமெல்லாம் அழிந்து, அழகெல்லாம் மறைந்து, அறிவெல்லாம் கெட்டு, அன்பெல்லாம் கலைந்து, உலகெல்லாம் பழித்து வாழ்வே மாய்ந்து போகும் நிலையிலும், மறப்பாள், மன்னிப்பாள் என்றுமே மறவாது இருப்பாள் மனைவி, மீண்டும் அன்பு வாழ்வினை அள்ளிக்கொடுப்பாள் என்பதனை இந்தக்கலித்தொகை நூல் அழகாக எடுத்துரைக்கிறது.

தலைவனானவன் அறமும், அன்பும், பண்பும் கலந்த வாழ்வினை வாழவேண்டும். அறம் மீறாதவன் வாழ்வான், அறம் மீறியவன் தாழ்வான் என்பதற்கேற்ப அறவாழ்வில் தலைவன்,தலைவி, மக்கள், மன்னன் இவர்களெல்லாம் கடைப்பிடிக்க வேண்டிய வாழ்வியல் நெறிமுறைகளைக் கூறுகிறது.

வரம்புக்கட்டிக்கூற இயலாத நிலையாமையை உடையது காற்று அதைப்போன்றுதான் வாழ்க்கையும் ஆற்றில் வெள்ளம் வருவதும் தெரியாது வடிவதும் தெரியாது. அது போன்றுதான் இளமையும், காலம் எதற்கும் காத்திருக்காது, அது நம்மை கடந்து போகும், அதனால் நாம் 'பருவத்தே பயிர் செய்' என்ற பழமொழிக்கேற்ப வாழவேண்டும்.

புலவர்கள் இந்நூலில் கூறப்பட்ட கற்பனைகள், உவமைகள் மற்றும் இயற்கை, மரம், மலர், செடி,

கொடி, நிலவு, சூரியன், மலை, நதி, கடல், அருவி, தலைவியின் அழகு என பல எண்ணற்ற உயிர்களை, உயிரில்லாப் பொருட்களை எல்லாம் அழகாக வருணித்துக்காட்டியிருக்கிறார். ஏனென்றால் நாமெல்லாம் அதை நேசிக்க வேண்டும் என்று, ஏன் நேசிக்க வேண்டும்? நாம் நேசித்தவைநெல்லாம் நாம் என்றும் பாதுகாப்பாகவும்,

மகிழ்ச்சியாகவும் வாழவைப்போம் என்று அதனால் நாம் இயற்கையை நேசித்து இயற்கைச் சூழல் அழியாமல் பாதுகாப்போம். தலைவியின் மீது நேசம் மிக்கஆகி அன்பு பெருக்கெடுத்து இன்பு வாழ்வு வாழவேண்டும்.

அரிது அரிது மானிடராய்ப்பிறத்தல் அரிது என்பார் ஔவையார்.

அரிதாய மானிடப்பிறவி பெற்றது பற்பல கடமைகளை - அறங்களை ஏற்று குறிப்பாக அறவோர்களைப் பாதுகாப்பதற்காக அவர்கள் செய்யும் அறச்செயல்களுக்குத் துணைநின்று வாழ வேண்டும்.வறுமை என்ற பெரிய பகையை வென்று, நம்மை மதிக்காதவர் மதிக்கும்படி அவர்தம் செருக்கு அடங்கும்படி வாழவேண்டும்.

‘இல்லறம் அல்லது நல்லறமன்று’ என்ற ஔவை கூற்றுக்கு இணங்க நாம் விரும்பும் மனைவி, மக்களோடு இன்ப வாழ்வு வாழ வேண்டும்.

அறம், பொருள், இன்பம் என்றும் முப்பொருளும் செல்வத்தால் பெறத்தக்கன. ஆகவே செல்வம் அறவழியில் ஈட்டவேண்டும்.

காட்டிலுள்ள உள்ள விலங்குகளுக்கும், பறவைகளுக்கும் கூட அன்வு வாழ்க்கை வாழ்கின்றன. அத்தகைய அன்வு வாழ்க்கை நம்மிடையே அமைய வேண்டும்.

கலித்தொகை கற்பித்ததை
கற்று கற்றபடி நின்று
களிப்போடு வாழ்வோம்
அறத்தைப் போற்றுவோம்
தீங்கில்லா சமுதாயம் படைப்போம்
மனித வளம் காப்போம்.

- பா..-1-1